# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM I

C 8102157

1. District : மயிலாடுதுறை PS : ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு Year : 2023 FIR No. : 01/23 Date : 31.10.2023
மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு மு.த.அ எண் நாள்

2. (i) Act சட்டம் : Sections பிரிவுகள் :
(ii) Act சட்டம் : Prevention of Corruption Sections பிரிவுகள் : 7 of PC (Amendment)
(iii) Act சட்டம் : (Amendment) Act 2018. Sections பிரிவுகள் : Act 2018.
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from : Date to :
குற்ற நிகழ்வு நாள் 30.10.2023 நாள் முதல் நாள் வரை
Time Period 14.30. Time from : Time to :
நேர அளவு நேரம் முதல் நேரம் வரை
(b) Information Received at PS. Date : 31.10.2023 Time : 07.00
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் நேரம்
(c) General Diary Reference : Entry No(s) Time : 08.00
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் நேரம்

4. Type of Information : Written/ Oral :
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக எழுத்துமூலமாக (கணினியில் தட்டச்சு செய்யப்பட்டது)

5. Place of Occurrence (a) Direction and Distance from PS :
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் 25 கி.மீ தென் கிழக்கே.
Beat Number (b) Address : காழியப்பநல்லூர் கிராம நிர்வாக அலுவலர் அலுவலகம், தரங்கம்பாடி தாலுகா, மயிலாடுதுறை மாவட்டம்.
முறைக் காவல் எண் முகவரி
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District : —
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : (b) Father's/ Husband's Name :
குற்றமுறையிட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் திரு. P. ஹரிஷ் தந்தை / கணவர் பெயர் S/o. பரசுராமன்
(c) Date / Year of Birth 44/2023 (d) Nationality : (e) Passport No. :
நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம் இந்தியர் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : — Place of Issue :
வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : (g) Address : 1/180, தெற்குதெரு, இடையாண்டியூர், தரங்கம்பாடி தாலுகா, மயிலாடுதுறை மாவட்டம்
தொழில் விவசாயம் முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

திரு. பாண்டியராஜன், கிராம நிர்வாக அலுவலர், காழியப்பநல்லூர், பொறுப்பு பொறையார், தரங்கம்பாடி தாலுகா, மயிலாடுதுறை மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையிட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

வாதியால் தாமதம்.

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No if any
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required)
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம் (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து சமர்பிக்கப்படுகிறது

இன்று 31.10.2023 ஆம் தேதி காலை 07.00 மணிக்கு மயிலாடுதுறை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளராகிய நான் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலக பொறுப்பில் இருந்தபோது P.விஜய், த/பெ.பரசுராமன். 1/180, தெற்கு தெரு. குட்டியாண்டியூர், தரங்கம்பாடி தாலுக்கா, மயிலாடுதுறை மாவட்டம் என்பவர் என் முன் ஆஜராகி கொடுத்த எழுத்துமூலமான கணினியில் தட்டச்சு செய்யப்பட்ட புகாரின் விபரம் பின்வருமாறு: அனுப்புதல், P.விஜய், த/பெ.பரசுராமன், 1/180, தெற்கு தெரு. குட்டியாண்டியூர். தரங்கம்பாடி தாலுக்கா, மயிலாடுதுறை மாவட்டம். பெறுதல் உயர்திரு.காவல் ஆய்வாளர் அவர்கள். ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, மயிலாடுதுறை மாவட்டம். அய்யா. நான் குட்டியாண்டியூரில் என் மனைவி நாகலெட்சுமி மற்றும் ஒரு மகளுடன் வசித்து வருகிறேன். நான் DEE வரை படித்துள்ளேன். எனக்கு சொந்தமாக 1 ஏக்கர் 11 குழி

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி .................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

P. Vijay 31/10/2023

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்
31.10.2023

15. Date & Time of despatch to the court 31.10.2023.
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name பெயர் M. ARULPRIYA
Rank: நிலை Inspector of Police,
Vigilance and Anti Corruption
Mayiladuthurai.

* GCP-240-34(Type-2) 90,000 Cps -21 3 16(HCL-12)p 2

விவசாய நிலம் பொறையாரில் உள்ளது. நான் விவசாயம் செய்து வருகிறேன். நான் கடந்த 08.03.2023 ஆம் தேதி காரைக்காலைச் சேர்ந்த லூயிஸ் பாகு என்பவரிடம் தரங்கம்பாடி தாலுக்கா பொறையார் கிராமத்தில் உள்ள புல எண் 386/12 இல் உள்ள 42 ஏர்ஸ் விவசாய நிலத்தினை ரூபாய் 5,00,000/- க்கு கிரையமாக வாங்கினேன். மேற்படி நிலம் தரங்கம்பாடி சார்பதிவாளர் அலுவலக ஆவண எண் 359/2023 படி எனது பெயருக்கு கிரய பத்திரமாக பதிவு செய்யப்பட்டது. அதன் பிறகு மேற்படி நிலத்திற்கான பட்டா எனது பெயரில் பட்டா எண் 1827 ஆக மாற்றப்பட்டது. மேற்படி நிலத்தில் 15 ஏர்ஸ் மட்டும் எனது மனைவி நாகலெட்சுமி பெயருக்கு தரங்கம்பாடி சார்பதிவாளர் ஆவண எண் 487/2023 இன் படி 28.03.2023 அன்று செட்டில்மெண்ட் ஆவணம் செய்து கொடுத்தேன். மேற்படி நிலத்திற்கு என் மனைவி நாகலெட்சுமி பெயரில் பட்டா மாறுதல்செய்ய சார்பதிவாளர் அலுவலகத்திலேயே கணினியில் பதிவு செய்தார்கள். மேற்படி பட்டாவானது சப்டிவிசன் செய்யவேண்டி இருந்ததால் சுமார் 15 நாள் கழித்து பொறையார் சர்வேயர் என்னை தொடர்புகொண்டு இடத்தை அளப்பதற்காக வந்தார். அவருடன் காளியப்பநல்லூர் VAO, திரு.பாண்டியராஜன் பொறுப்பு பொறையார் VAO அவர்களும் வந்திருந்தார். அப்போது மேற்படி இடம் ஏற்கனவே அளக்கப்பட்டு விட்டது என்றும் Online- இல் சரிசெய்துவிட்டு உங்களுக்கு தகவல் தெரிவிக்கின்றோம் என்று VAO திரு.பாண்டியராஜன் அவர்கள் என்னிடம் கூறினார். அதன்பிறகு நான் வேலை தொடர்பாக வெளியூர் சென்றுவிட்டேன். அதன்பிறகு கடந்த 16.10.2023 அன்று நான் VAO திரு.பாண்டியராஜன் அவர்களை மதியம் 3 மணியளவில் பொறையார் VAO அலுவலகம் சென்று என் பட்டா பற்றி கேட்டேன். அதற்கு அவர் அதைப்பற்றி பிறகு சொல்கிறேன் என்று சொன்னார். மேலும் நான் அவரிடம் எனது நிலத்திற்கு சிட்டா அடங்கல் வேண்டும் என்று கேட்டேன். அதற்கு VAO எதற்காக என்று கேட்டார். நான் அவரிடம் சிறுகுறு விவசாயிகளுக்கான சான்று பெறுவதற்காக வேண்டும் என்று சொன்னேன். அவர் அன்றைய தினமே என்னிடம் என் நிலத்திற்குரிய சிட்டா அடங்கல் கொடுத்தார். மேலும் அவர் சிறுகுறு விவசாயிக்கான சான்றுக்கு Online-இல் அப்ளை செய்துவிட்டு வாருங்கள் உங்கள் மனைவி பெயரில் உள்ள பட்டா மாறுதல் ஆணையையும் சேர்த்து வாங்கிக்கொள்ளலாம் என்று சொன்னார். அதன்பிறகு நான் வீட்டிற்கு வந்துவிட்டேன். நான் 18.10.2023 ஆம் தேதி

சிறுகுறு விவசாயிகளுக்கான சான்றுக்காக Online இல் இ-சேவை மையம் மூலம் பொறையாரில் விண்ணப்பித்தேன். அதன்பிறகு எனக்கு வேலையாக இருந்ததால் காளியப்பநல்லூர் VAO -வை பார்க்க முடியவில்லை. நேற்று 30.10.2023 அன்று மதியம் 2 ½ மணியளவில் VAO பாண்டியராஜன் அவர்களை காளியப்பநல்லூர் VAO அலுவலகத்திற்கு சென்று பார்த்து என்னுடைய மனைவி பெயரில் உள்ள பட்டா பற்றியும், சிறுகுறு விவசாயிக்கான சான்று பற்றியும் கேட்டேன். அதற்கு அவர் என் மனைவி நாகலெட்சுமி பெயரில் பட்டா மாறுதலுக்கு பரிந்துரை செய்ததற்கும், என் மனைவி பெயரில் உள்ள பட்டா மாறுதல் ஆணையை கொடுக்கவும் அவருக்கு ரூபாய் 1,500/- ம் மற்றும் எனது பெயரில் சிறுகுறு விவசாயிக்கான சான்றினை பரிந்துரை செய்ய எனக்கு ரூபாய் 1,000/- ம் மொத்தம் 2.500/- பணம் கொடுங்கள் என்றும் அப்போதுதான் உங்கள் பெயரில் சிறுகுறு விவசாயிக்கான சான்றிற்கு பரிந்துரை செய்வேன் என்றும் சொன்னார். அப்போது நான் என்னிடம் அவ்வளவு பணம் இல்லை என்றும் நாளை வருகிறேன் என்று அவரிடம் சொல்லிவிட்டு வந்துவிட்டேன். என் மனைவி பெயருக்கு பட்டா மாற்றம் செய்ய பரிந்துரை செய்ததற்கும் மேற்படி பட்டா மாறுதல் ஆணையை கொடுப்பதற்காகவும் மேலும் எனது பெயரில் சிறுகுறு விவசாயிக்கான சான்று பெறுவதற்காக பரிந்துரை செய்வதற்கும் VAO பாண்டியராஜன் அவர்களுக்கு ரூபாய் 2,500/- லஞ்சப்பணம் கொடுக்க எனக்கு விருப்பம் இல்லை. எனவே VAO திரு.பாண்டியராஜன் என்னிடம் லஞ்சமாக கேட்ட ரூபாய் 2,500/- பணத்தை ஏற்பாடு செய்துகொண்டு தங்கள் அலுவலகம் வந்து இந்த புகாரினை கொடுக்கிறேன். என்னிடம் லஞ்சமாக ரூபாய் 2,500/- பணம் கேட்ட காளியப்பநல்லூர் VAO திரு.பாண்டியராஜன் பொறுப்பு பொறையார் VAO மீது சட்டப்படியான நடவடிக்கை எடுக்க பணிவுடன் கேட்டுக்கொள்கின்றேன். இத்துடன் எனது பெயருக்கு பதிவு செய்த கிரய பத்திர நகல், என் மனைவி பெயருக்கு பதிவு செய்த செட்டில்மெண்ட் நகல், பத்திர பதிவின் தொடர்ச்சியாக பட்டா மாறுதல் செய்யும் பொருட்டு பதிவு விவரங்கள் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டமைக்கான ஒப்புகைச்சீட்டு, சிறு/குறு விவசாயி சான்றிதழ் பெறுவதற்காக விண்ணப்பித்ததற்கான ஒப்புகைச்சீட்டு நகல் ஆகியவற்றை இணைத்துள்ளேன். இப்படிக்கு தங்கள் உண்மையுள்ள (ஆங்கிலத்தில் ஒப்பம்) P.Vijay.

இடம்: [illegible] தேதி:31.10.2023 Hon'ble Sir, I have received this computer typed written complaint from the complainant on 31.10.2023 at 07.00 hrs and verified the antecedents of the Accused Officer and ascertained the genuineness of the complaint through sources after that registered a case in Mayiladuthurai Vigilance and Anti Corruption Detachment Crime.No.01/2023, u/s 7 of Prevention of Corruption (Amendment) Act 2018 on 31.10.2023 at 08.00 hrs.

(M.ARULPRIYA) 31/10/2023
Inspector of Police,
Vigilance and Anti - Corruption,
Mayiladuthurai.

I am submitting the original F.I.R, along with the complaint to the Hon'ble Court of the Chief Judicial Magistrate/ Special Judge, Mayiladuthurai and the copies of the FIR to all other concerned higher officials

(M.ARUPRIYA) 31/10/2023
Inspector of Police,
Vigilance and Anti Corruption,
Mayiladuthurai.